
# S.I.R.க்கு எதிராக அணி திரண்ட ‘இந்தியா’ கூட்டணியினர்!



ஒன்றிய பா.ஜ.க அரசு தேர்தல் ஆணையத்தோடு கூட்டணி சேர்ந்து செய்யும் S.I.R க்கு எதிராக ‘இந்தியா கூட்டணி ஆர்ப்பாட்டம்’ நெல்லை சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நெல்லை ஒருங்கிணைந்த மாவட்டம் சார்பில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் முன்னாள் அமைச்சர்கள் பூங்கோதை ஆலடி அருணா,மைதீன்கான் முன்னாள் எம்.எல்.ஏ,மனோஜ் பாண்டியன், ரூபி மனோகரன் எம்.எல்.ஏ. முன்னாள் எம்பி ஞானதிரவியம் கழக நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், பெருமாள்,கணேஷ் குமார் ஆதித்தன், பிரபாகரன்,பேச்சிபாண்டியன்,சித்திக், லெட்சுமணன்,சு.சுப்பிரமணியன், தினேஷ்,விஜிலா சத்யானந்த், பூ.சுப்பிரமணியன்,பரமசிவ அய்யப்பன் சுரேஷ்,தர்மன்,கிரிஜா குமார்,மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்பட சுமார் 2000 பேர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதுரை கோ.புதூரில் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல் ஏ., தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ம.ஜெயராம், மு.பூமிநாதன் எம் எல் ஏ., ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒச்சுபாலு, மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல், புதூர் பகுதி செயலாளர் புண்ணியமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழகத்தினர் பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் எஸ்.ஐ.ஆர். கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் இணைந்து தேனி பழைய பஸ் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சரவணகுமார் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ., உயர் மட்ட செயல் திட்ட குழு உறுப்பினர் எல் மூக்கையா, மாநில தீர்மானக் குழு இணை செயலாளர் ஜெயக்குமார், கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன், மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன் மற்றும் கழக முன்னோடிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க அரசு தேர்தல் ஆணையத்தோடு கூட்டணி சேர்ந்து செய்யும் S.I.R.க்கு எதிராக இந்தியா கூட்டணி ஆர்ப்பாட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு தென்காசி ஒருங்கிணைந்த மாவட்டம் சார்பில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீ குமார் எம்.பி.கழக நிர்வாகிகள் கனிமொழி, கென்னடி,ஷெரிப்,சாதிர், முத்துச்செல்வி,மாவட்ட காங்கிரஸ் தலைவர் பழனிநாடார் எம்.எல்.ஏ. ம.தி.மு.க துணை பொது செயலாளர் ராஜேந்திரன்,சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள்,கழகத் தொண்டர்கள் உட்பட சுமார் 1000 ம் பேர் பங்கேற்றனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு எஸ்.ஐ.ஆர்.ஐ. எதிர்த்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திண்டுக்கல்லில் நடைபெற்ற கழக கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் தலைமையில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணைந்த கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனைப்படி மதுரை வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலத்தில் எஸ்.ஐ.ஆர். கொண்டு வந்துள்ள தேர்தல் ஆணையத்தை கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கண்டன உரையாற்றினார். உடன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழகத்தினர் பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.



தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகம் முன்பு இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷாமுத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தலைமையில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் கருமாணிக்கம், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி,முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, அன்வர் ராஜா, சுந்தர்ராஜன் மற்றும் இன்பா ஏ.என். ரகு, பவானி ராஜேந்திரன் முருகவேல் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை அரண்மனை வாயில் சண்முகராஜா கலையரங்கில் மதச்சார்பற்றமுற்போக்கு கூட்டணி சார்பில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் SIR ஐ கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது. இதில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் ,எஸ். மாங்குடி, முன்னாள் எம்.எல்.ஏவே.. ராஜசேகரன்,மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதிஜோன்ஸ் ரூசோ, சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் உட்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் உள்ளார்கள்.